## *DVC.No.72/2022*

*PW1 – அகல்யா* *நாள் 11.07.2023.*

***எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை***

1. நான் இந்நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ள மனுவானது திருவாரூர் சமூக நலத்துறை அலுவலரிடம் மனு கொடுத்து அதன்பின்னர் நீதிமன்றததில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான்.

2. சமூக நலத்துறை அலுவலரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள படிவங்கள் 1 முதல் 3 வரை உள்ளவற்றில் நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். அதில் நான் சொன்ன விவரங்கள் தான் உள்ளது என்றால் - சரிதான்.

3. நான் சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த மனுவில் எனக்கும் எனகது குழந்தைக்கும் ஜீவனாம்சம், இழப்பீடு, எனது பெற்றோர்களால் செய்யப்பட்டுள்ள தங்கை நகைகள் மற்றும் சீர்வரிசைகளை கேட்டு மனு செய்துள்ளேன் என்றால் - சரிதான்.

4. நான் எனது மனுவில் எனது பெற்றோர்கள் எனக்கு 7.1/2 பவுன் நகை போட்டார்கள் என்றும் அதில் 3 பவுன் நகை வாங்கிவிட்டார்கள் என்றும் மீதி 4.1/2 பவுன் நகையை திரும்ப கேட்டுள்ே ளன் ்னறால் - சரிதான். அதில் 1ம் எதிர்மனுதாரருக்கு போட்ட 1 பவுன் கை செயின், 1 பவுன் கழுத்து செயின், 1/2 பவுன் மோதிரம், 1 பவுன் தோடு தொங்கல் ஆகியவை என்றால் - சரிதான்.

5. என்னால் சமூக நலத்துறை அலுவலர் மூலம் தாக்கல் செய்துள்ள படிவம் 1ல் கூடுதலாக நகையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரியல்ல.

6. சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த மனுவில், எனது கணவரிடமிருந்து எனக்கும் எனது குழந்தைக்கும் பாதுகாப்பு கேட்டோ, எனது கணவருடன் சேர்ந்து வாழ வேண்டியோ கேட்கவில்லை என்றால் - சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள மனு படிவம் 1ல் பாதுகாப்பு உத்தரவு, உறைவிட உத்தரவு கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான்.

8. படிவம் எண்.1, காலம் 2ல் 1ம் எதிர்மனுதாரர், என்னை காவல் சீருடை பணியாளர் பணிக்காக விண்ணப்பித்திருந்ததை தடுத்தும் நேர்முக தேர்விற்கு செல்லாமல் தடுத்த விவரத்தினை சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லவில்லை.

9. படிவம் 1ல் காலம் 3ல், 6 மாத காலமாக எனது கணவர் எந்தவித பொருளாதார உதவியும் செய்யவில்லை என நான் சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

10. கடந்த கொரனா ஊரடங்கின்போது நான் வீட்டைவிட்டு வெளியேறியதாக சொல்லியுள்ள நிலையில் எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லவில்லை.

11. எங்களது திருமணம் காதல் திருமணம் என்றால் - சரிதான். அதன்பின்னர் பெரியவர்களால் பேசப்பட்டு நடந்த திருமணம் என்றால் - சரிதான். எனது கணவர் ஊர் எந்த ஊர் என்றால் - திருத்துறைப்பூண்டி தாலுக்கா, குன்னலூர் கிராமம். நான் திருமணமாகி எத்தனை வருடங்கள் அங்கு வசித்தேன் என்றால் - 2 வருடங்கள். கூட்டுகுடும்பமாக வசிக்கவில்லை தனி குடித்தனம் தான் செய்து வந்தோம் என்றால் - சரிதான். எனது மாமனார், மாமியார் ஒரு வீட்டிலும் நான், எனது கணவர் மற்றும் குழந்தை ஒரு வீட்டிலும் வசித்து

வந்தோம் என்றால் - சரிதான். எங்கள் இருவருக்கும் வெவ்வேறு குடும்ப அட்டைகள் என்றால் - சரிதான்.

12. சமூக நலத்துறை அலுவலர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பவடிம் 1ல் வன்முறை நடந்த தேதி, இடம் மற்றும் நேரம் என்ற காலத்தில் விக்கிரபாண்டியம் எனது அம்மா வீடு, 24.03.2022ம் தேதியன்று இரவு 07.00 மணிக்கு என்று சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

13. எனது கணவரோ, எனது மாமனார், மாமியாரோ எனக்கு குடும்ப வன்முறை செய்யவில்லை என்றால் - சரியல்ல. எனது கணவர் மீது என் பாட்டி ஒரு புகார் கொடுத்து அந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் - சரிதான். எனது கணவர் இதுநாள்வரை என்னோடும் எனது குழந்தையோடும் வாழ தயாராக உள்ளார் என்றும் நான் அவருடன் வாழ பிடிக்காமல் அவரிடமிருந்து பிரிய வேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல.

14. எனது மனுப்படி எனது கணவர் வீட்டில் எந்த குடும்ப வன்முறையும் நடக்கவில்லை என்றால் - சரிதான். எனது கணவரை விட்டு நான் தன்னிச்சையாக நான் பிரிந்து வாழ்வதால் நான் கோரியுள்ள பரிகாரங்களை எனது கணவர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் - சரியல்ல.